முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 995

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

20.06.2022, திங்கட்கிழமை

1. கருணைவடிவான அரங்கனே
   கலியினை மீட்கவந்த தேசிகனே
   தர்மபலம் கொண்டு உலகோரை
   தவசிகளாக்கி உலகமாற்றம் புரிய வந்த
2. வந்தநல் அரங்கனே ஞானியே
   வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   சிந்தைபட ஞான அறிவுரை ஆசி
   செப்பிடுவேன் சுபகிருது மிதுன திங்களில்
   (சுபகிருது வருடம் ஆனி மாதம் 06 நாள், 20.06.2022 திங்கட்கிழமை)
3. திங்களிலே அரங்கனுக்கு ஞானசக்தி
   தெரிவிப்பேன் முருகப்பெருமான் யானும் இனிதே
   ஓங்காரம்பட மகா சூட்சுமங்கள்
   உயர்வாக பிரம்மவேளை நித்தம் அருளிவர
4. வருகவே அரங்கனை அனுதினம்
   வல்லமை வேண்டி சந்திக்கும் மக்களெல்லாம்
   முருகப்பெருமான் என் அருளை பெறுவதோடு
   முழுமை ஞானம் பெற்று சிறக்கக்கூடும்
5. கூடவே அரங்கன் வந்த நோக்கம்
   குறைவின்றி வருமுலகில் நிறைவேறி
   திரு அருள்பட உலகோரெல்லாம்
   தெரிவிப்பேன் ஞானவான்களாக சிறந்து
6. சிறந்துமே கலியின் துன்பங்கள் விலகி
   செப்பிடுவேன் உலகோர் ஞானயுகவாழ்வு
   மறுப்பின்றி அரங்கன் சேவையாலே
   மக்களெல்லாம் அடைந்து உயர நேரும்
7. நேர்மைகொண்டு அரங்கன் தொண்டர்களும்
   நிலவுலகம் எங்கும் பரவி வர
   பெருமைமிக்க அரங்கன் புகழை
   பிசகின்றி உலகெல்லாம் இயக்கிவர
8. வருகவே உலகம் பெருமாற்றம்
   வருமுலகில் அரங்கன் சேவையால் காணக்கூடும்
   தருகின்ற குணமுள்ள மக்களாய் உலகோர்
   தர்மவான்களாய் எங்கும் நிரம்பி

9. நிரம்பியே தர்மஞான உயராட்சி
நிலவுலகம் கண்டு மாற்றங்காணும்
வருமுலகில் அன்னதனால் உலகமக்கள்
வணங்கி அரங்கன் வழி வர இந்த அற்புதம் நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–